**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.**

நாள் : 02.04.2024 2 STC 30/2023

**பெயர் : M. Elango - வா.சா.1**
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் காரவலசு, அரசு மேல்நிலைப்பள்ளி அசிஸ்டென்டாக பணிபுரிந்து வருகிறார். எதிரி எத்தனை வருடமாக பழக்கம் என்றால் 5,6 வருடமாக பழக்கம். எதிரி யார் மூலமாக பழக்கம் என்றால் எனது நண்பர்கள் 4,5 பேர் எதிரிக்கும் பழக்கம் அவர்கள் மூலம் எதிரி அறிமுகமானார். எந்த நண்பர் மூலம் அறிமுகமானார் என தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி எனக்கு 5,6 வருடங்களுக்கு முன்பு எனக்கு அறிமுகம் ஆகும் போது என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் பெருந்துறை ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பணியில் இருந்தார்.

2. எதிரியின் மாத சம்பளம் எவ்வளவு என்றால் அதுபற்றி தெரியாது. எதிரியின் சொந்த ஊர் எது என்றால் கொல்லங்கோவில். எதிரிக்கு சொந்தமாக வீடுகள் உள்ளதா மற்றும் வேறு சொத்துக்கள் உள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு அப்ரைசர் வருமானம் தவிர வேறு வருமானம் உள்ளதா என்றால் வீட்டு வாடகை வருகிறது, ரியல் எஸ்டேட் தொழிலும் செய்கிறேன். எனது மகள் அரசு பணியில் உள்ளார், அவருக்கு இன்னும் திருமணம் ஆகாததால் அவரது சம்பளம் வீட்டில் தான் கொடுப்பார். எனக்கு மாத சம்பளம் அப்ரைசர் என்ற முறையில் எவ்வளவு வரும் என்றால் ரூ.30,000 முதல் ரூ.40,000 வருமானம் வரும்.

3. எனக்கு வீடு எங்குள்ளது என்றால் அனுமன்பள்ளியில் உள்ளது. மேற்படி வீடு வாடகைக்கு விட்டதற்கான வாடகை ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கும் எனக்கும் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் ஏற்கனவே ஒருமுறை பணம் வாங்கி கொடுத்துள்ளார். ஏற்கனவே இருந்த பரிவர்த்தனை எப்போது நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு எத்தனை வங்கிகணக்குகள் உள்ளது என்றால் 3 வங்கியில் உள்ளது. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஈரோடு மெயின் கிளை, மாவட்ட கூட்டுறவு வங்கியிலும், DBS வங்கி சித்தோடு கிளையிலும் கணக்கு உள்ளது. மேற்படி வங்கிகணக்குகளின் கணக்கு பட்டியல் ஆஜர் செய்ய முடியுமா என்றால் முடியும்.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/- சாட்சி : **M. Elango**

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம் எண்.1
ஈரோடு.